# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI

## MCOP. No.53/2017

## RW - 2

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : கோகுல் கண்ணன் | | : | |
| **Father Name** | : சுப்பிரமணியன் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of July 2025.)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. எங்கள் நிறுவனத்தால் TN 39 AZ 5581 என்ற வாகனத்திற்குநு வழுங்கிய காப்பீட்டின் நகல் எ.ம.சா.ஆ.1
2. வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளருக்கு நாங்கள் அனுப்பிய சட்ட அறிவிப்புகளின் அலுவலக நகல் தபால் ரசீதுகளுடன் எ.ம.சா.ஆ.2
3. வாகனத்தின் உரிமையாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் எ.ம.சா.ஆ.3
4. வாகனத்தின் ஓட்டுநருக்கு சார்பு செய்யப்படாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை அசல் எ.ம.சா.ஆ.4

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு இந்த வழக்கு பற்றிய விபரங்கள் கோப்பின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். அதனால், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்தவழக்கு விபத்து இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரால் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த இளவர் தினேஷ்குமார் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த மனுதாரர் 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்து 3–ம் நபர் என்றால் சரிதான். அவ்வாறு 3–ம் நபருக்கு ஏற்படும் இழப்பீட்டை காப்பீட்டு நிறுவனம் ஈடு செய்து விட்டு அந்த தொகையை வாகனத்தின் உரிமையாளரிடம் இருந்து திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரிதான். அதனால், இந்த வழக்கு விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை நாங்கள் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.31 16:40:57 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**